# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1724/8 - 2011 සැප්තැම්බර් 22 වැනි බ්‍රහස්පතින්දා - 2011.09.22

*1724/8 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 22 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

### ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும்

எனது இல. : *01/10/03/04.*

**ஊவா மாகாண மாகாண சபை**

*ஊவா மாகாண ஆளுநரினால் செய்யப்படும் நியமனங்கள்*

ஊவா மாகாணத்தின் கௌரவ ஆளுநர் சீ. நந்தா மெத்தியு அவர்களால் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள நியமனங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன என்பதனை இதன் மூலம் அறிவிக்கின்றேன் :-

1. இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு I யைச் சேர்ந்த திரு. சுமித் சுரவீர அவர்கள் உடனடியாக செயற்படும் வகையில் ஊவா மாகாண மாகாண சபையின் சபைச் செயலாளராக,

2. இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு I யைச் சேர்ந்த திரு. கே. டி. சிரிசேன அவர்கள், உடனடியாக செயற்படும் வகையில் ஊவா மாகாண இளைஞர் அலுவல்கள், விளையாட்டுத்துறை, சமூக நலனோம்புகை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி, மின்சக்தியும் வலுசக்தியும், நெசவு கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் தொடர்பான அமைச்சின் செயலாளராக,

3. இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு I யைச் சேர்ந்த திரு. கே. டி. சிரிசேன அவர்கள் தனது நிரந்தர பதவிக்கு மேலதிகமாக, ஊவா மாகாண மாகாண சபையின் சபைச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள திரு. சுமித் சுரவீர அவர்கள் அப்பதவியின் சேவைக்கு சமுகமளிக்கும் வரை, ஊவா மாகாண மாகாண சபையின் சபைச்செயலாளராக பதிற் கடமையாற்ற,

4. ஊவா மாகாண உள்ளூராட்சி ஆணையாளராக பதிற்கடமையாற்றும் எம். பி. என். எம். விக்ரமசிங்க அவர்கள், 2011.08.07 ஆந் திகதி முதல் 2011.10.29 ஆந் திகதி வரை வெளிநாடு சென்றிருப்பதால், அவர் மீள தீவிற்கு திரும்பும் வரை, இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு I யைச் சேர்ந்த திரு. குணதாச சமரசிங்க அவர்கள் தனது நிரந்தர பதவிக்கு மேலதிகமாக, ஊவா மாகாண உள்ளூராட்சி ஆணையாளராக பதிற் கடமையாற்ற,

5. ஊவா மாகாண கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் எம். பீ. என். எம். விக்ரமசிங்க அவர்கள் 2011.08.07 ஆந் திகதி முதல் 2011.10.29 ஆந் திகதி வரை வெளிநாடு சென்றிருப்பதால், அவர் மீள தீவிற்கு திரும்பும் வரை, இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு III யைச் சேர்ந்த திருமதி என். சீ. ஹென்னாயக அவர்கள், தனது நிரந்தர பதவிக்கு மேலதிகமாக, ஊவா மாகாண நிதி, திட்டமிடல், சட்டமும் சமாதானமும், கல்வி உள்ளூராட்சி மன்றங்கள், கலாசார அலுவல்கள், போக்குவரத்து, காணி, நீர்ப்பாசனம், பொருளாதார மேம்பாடு, கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி மற்றும் நிர்மாணத்துறை தொடர்பான அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளராக பதிற்கடமையாற்ற,

6. ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் திரு. ஏ. எம். விக்ரமசிங்க அவர்கள், 2011.08.05 ஆந் திகதி முதல் 2012.08.04 ஆந் திகதி வரையில் பண்டாரவளை பிரதேச சபையின் சபைச் செயலாளராக, ஒப்பந்த அடிப்படையில் மீள் பணியாற்ற,

7. இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு III யைச் சேர்ந்த திரு. எஸ். சீ. வீரகோன் அவர்கள் 2011.08.08 ஆந் திகதி முதல் செயற்படும் வகையில், ஊவா மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளராகவும் மற்றும் சங்கங்கள் பதிவாளராகவும் பதிற் கடமையாற்ற,

8. ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் திரு. ஆர். எம். புன்சி சின்ஞ்ஞோ அவர்கள் 2011.07.21 ஆந் திகதி முதல் 2011.12.31 ஆந் திகதி வரையில் ஹப்புத்தளை நகர சபையின் சபைச் செயலாளராக, ஒப்பந்த அடிப்படையில் மீள் பணியாற்ற,

9. இலங்கை கணக்காளர் சேவையின் வகுப்பு II யைச் சேரந்த திரு. ஆர். டி. எஸ். எல். ஜயசிங்க அவர்கள், 2011.08.22 ஆந் திகதி முதல் பண்டாரவளை மாநகர சபையின் கணக்காளராக பதிற்கடமையாற்ற,

10. இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு III யைச் சேர்ந்த திருமதி ஜீ. டபிள்யூ. சீ. எஸ். பிரியபாஷினி அவர்கள் தனது நிரந்தர பதவிக்கு மேலதிகமாக, பண்டாரவளை மாநகர சபையின் மாநகர சபை ஆணையாளராக கடமை ஆற்றுவதற்கு,

11. இலங்கை நிர்வாக சேவையின் ஓய்வுபெற்ற திரு. கே. ஏ. பெரேரா அவர்கள், ஊவா மாகாண விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் அலுவல்கள் தொடர்பான அமைச்சின் உதவிச் செயலாளர் பதவிக்கு மேலதிகமாக, 2011.08.02 ஆந் திகதி முதல் நிரந்தர உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யப்படும் வரை அல்லது 2011.12.31 ஆந் திகதி ஆகியவற்றில் முன்தோன்றும் திகதி வரையில் ஊவா மாகாண சுகாதாரம், சுதேச வைத்தியம், நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு விவகாரம் மற்றும் மகளிர் விவகாரம் தொடர்பான அமைச்சின் உதவிச் செயலாளராக ஒப்பந்த அடிப்படையில் பதிற்கடமையாற்ற.

எச். எம். சோமதிலக,
ஊவா மாகாண ஆளுநரின்
செயலாளர்.

ஆளுநரின் அலுவலகம்,
இராஜ வீதி,
பதுளை,
2011, செத்தெம்பர் 16.

9- 130

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.